**<u>கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 20/2021**

**வா.சா. – முருகன்**

<u>24–07–2026 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வா.சா.1 தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் தற்போது 47,மங்களம் ரோடு திருப்பூரில் கே.வி.ஆர்.நகரில் குடியிருக்கிறேன். வழக்கு சொத்து வேறு இடத்தில் உள்ளது என்றால் சரியல்ல எனது வீட்டின் பின்னால் உள்ளது. வழக்கு சொத்தில் நான் குடியிருக்கவில்லை. தாவா சொத்து என்னுடையது என்பதற்கு என்ன ஆவணம் உள்ளது என்றால் தண்ணீர் வரி, மின் கட்டணம் கட்டியுள்ளேன். 45 ஆண்டுகளாக நான் உள்ளேன். பதிவு செய்யப்பட்ட ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. நான் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் பதிவு செய்யப்பட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் என்னிடம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் இருந்திருந்தால் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும், அவ்வாறு இல்லாததால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. எனது உடன் பிறந்தவர்களும் எனது அப்பாவும் தாவா சொத்து பொறுத்து பாகபாத்திய விடுதலை பத்திரம் எழுதிகொடுத்ததாக சொல்லும் நான் அவர்களுக்கு அதை எழுதுவதற்கு எதன் அடிப்படையில் உரிமை வந்தது என்றால் 45 வருடங்களுக்கு முன்பு பக்கத்து வீட்டுக்காரர் எனது அப்பாவிற்கு தாவா சொத்தை சும்மா கொடுத்தார். ஆவணம் எதுவும் எழுதிவாங்கவில்லை. தாவா சொத்தில் எனக்கு உள்ள உரிமையை காண்பிக்க ஆவணம் இல்லாததால் தாவா சொத்து இவ்வளவு நீள அகலத்தில் உள்ளதாக கூற எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல.

3. தாவா சொத்து புறம்போக்கு நிலம் 45 வருடங்களாக அங்கு தான் குடியிருந்து வருகிறோம். தாவா சொத்து புறம்போக்கு நிலம் என்பதால் தான் ஆவணம் பதிவு செய்யவில்லை என்றும் அதனால் தான் நாங்களே எங்களுக்குள் நான் சொல்லும் பாகபாத்திய விடுதலை ஆவணத்தை ஏற்படுத்தி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புறம்போக்கு நிலம் என்பதால் எங்களுக்கு உரிமையில்லை என்றும் இவ்வழக்கை தாக்கல்

செய்வதற்கு எனக்கு உரிமையோ அருகதையோ இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு அருகே தான் பிரதிவாதிகள் இருவரும் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தை நான் சொல்லும் ஆரம்ப காலம் முதல் பிரதிவாதிகள் பயன்படுத்தி வந்தார்கள் என்றால் இல்லை. கே.வி.ஆர் நகரில் 23 ஆண்டுகளுக்கு முன்பு பெரிய தீ விபத்து நடந்தது என்றும் அதற்கும் தாவா சொத்திற்கும் சம்பந்தம் இல்லை. அந்த தீ விபத்தில் 1ம் பிரதிவாதியின் வீடு எரிந்து விட்டதால் மாவட்ட ஆட்சியர் நஷ்ட ஈடு வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல.

4. 1ம் பிரதிவாதியின் வீடு தீ விபத்தில் எரியவில்லை அதன் பக்கத்து வீடு தான் தீ விபத்தில் எரிந்தது. வா.சா.2 எனது அண்ணன். வா.சா.2 அவரது குறுக்கு விசாரணையில் நஷ்ட ஈடு வழங்கியது உண்மை என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் நஷ்ட ஈடு கொடுத்ததை பற்றி எனக்கு முழுமையாக தெரியவில்லை. பிரதிவாதிகள் ஆரம்ப காலம் முதல் அங்கு குடியிருந்து வந்ததால் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு நிவாரணம் வழங்கியுள்ளார் என்றும், அந்த இடத்தில் இருந்த குடிசை எரிந்து விட்டதால் தற்போது பிரதிவாதிகள் கட்டிடம் கட்ட முயற்சித்த போது தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் அவர்கள் இடத்தில் கட்டிடம் கட்டினால் பிரச்சனை இல்லை என்னுடைய இடத்தையும் சேர்த்து கட்டியதால் தான் பிரச்சனை.

5. தாவா சொத்தில் வீடு உள்ளதாக சொல்லும் நான் அதை எங்கள் அத்தில் கட்டிவிட்டோம் என்றால் சரியல்ல வீட்டிற்கு பின்புறம் இடம் இருந்தது அதனை நாங்கள் புழங்கி வந்தோம். தாவா சொத்து புறம்போக்கு சொத்து என்றும், அதில் தான் நான் வீடு கட்டியுள்ளேன் என்றும் தற்போது பிரதிவாதிகள் அவர்களுடைய இடத்தில் சேதமடைந்த வீட்டை புதியதாக கட்டும்போது தான் பிரச்சனை செய்கிறேன் என்றால் அவர்கள் இடத்தில் கட்டிடம் கட்டினால் பிரச்சனை இல்லை. தாவா தாக்கல் செய்த பின்பு மேற்படி இடத்தில் இருவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு குற்றவழக்கு இருவர் மீதும் உள்ளது என்றால் சரிதான்.

6. புறம்போக்கு சொத்து என்பதால் எனக்கோ எனது அப்பாவுக்கோ எந்த உரிமையும் இல்லை என்றும் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் வழக்கு தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.07.24 06:51:28 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.